**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் - 2019**

-----------------------------------------------------------------------------

## 1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதாஎனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 65 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படா மையால் ரூபா 365,974,993 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்டிருந்த போதும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் மீண்டும் மதிப்பீடு (Revaluation) இற்காக பல்கலைக்கழகத்தினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு குறித்த செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த சொத்துக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 மற்றும் 08 இற்கு இணங்க நிகழத்தக்க பொறுப்புக்கள், இனங்காணப்படாத உடன்படிக்கை செய்யப்பட்ட மற்றும் நிதியல்லாத வெளிப்படுத்தல்கள் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் மாதாந்த ஈடாக்கும் படிகள் (MCA) உள்ளடக்கப்பட்ட பணிக்கொடை படிகள் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவில் தாமதத்திற்காக மிகை அறவீடு கோரல் தொடர்பாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தரால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக 2019 செப்தம்பர் 04 ஆந் திகதி தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். ஓய்வு பெற்ற உத்தியோகத்தரால் கோரப்பட்ட மாதாந்த ஈடாக்கும் படிகள் (MCA) பணிக்கொடை படிகளுடன் கொடுப்பனவு செய்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 2019/05 இன் பிரகாரம் உரித்தில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிகழத்தக்க பொறுப்புக்கள், நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களுக்குரிய அலுவலக உபகரணங்களுக்காக மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் திட்டவட்டமாக குறிப்பிடப்படாமல் கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் 03 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகளாக காண்பிக்கப்பட்டிருந்தது. ஆதலால் | இணங்குகின்றேன். கணக்கீட்டு குறிப்புக்கள் மூலம் ஒவ்வொரு சொத்துக்கள் வகைக்கும் பெறுமானத்தேய்வு காலவீச்சொன்று வெவ்வேறாக காண்பிக்க எதிர்காலத்தில் | அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி மென் பொருட்களுக்காக ஆயுட்காலம் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக உபகரணங்கள் தொடர்பாக பெறுானத்தேய்வு கணிப்பீடு சரியானதென உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத்தேய்வு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கற்பனை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,130,626 கிரயமான கணனி மென்பொருட் களுக்குரிய எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளதார நலன்கள் அல்லது காலக்கழிவு சதவீதம் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | இணங்குகின்றேன். கற்பனை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள மென்பொருட்களுக்குரிய பயன்படு ஆயட்காலம் கணக்கீட்டு குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கற்பனை சொத்துக் களுக்குரிய கீழ் வீதம் காலக்கழிவு சதவீதம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இரசாயன பொருட்கள் மற்றும் கண்ணாடி உபகரணங்களின் பெறுமதி ரூபா 23,337,528 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமதி ரூபா 19,974,934 என அதாவது ரூபா 3,362,594 குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | இணங்குகின்றேன். இருப்பு மீதிகளை எதிர்வரும் காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் இருப்பு பெறுமதி மெய்மையாய்வு அறிக்கை உரிய பதிவுகளுடன் ஒப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கம் பாதுகாக்கப்படும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் முன்னைய ஆண்டில் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த விசேட நிதிய கணக்கு மீளாய்வாண்டின் போது உள்ளடக்கப்படாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் திருத்தங்களின் போது அரச மானியங்கள் மற்றும் ஏனைய மானியங்கள் தொடர்பான கொள்கைகள் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டன. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தகவல்களை முன்வைத்தல் தரத்தை மேமம்படுத்து வதற்காக உரிமை மற்றும் ஒதுக்கங்கள், நிதியம் தொடர்பான தகவல்கள் ஐந்தொகையில் உரிமை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டன. | நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கம் பாதுகாக்கப்படும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய ரூபா 872,000 ஆன குறுங்கால பாடநெறி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். வெளிவாரி பாடநெறி மாணவர்களின் வருமானத்தை குறித்தஜரத்த பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானம் இனங் காணப்பட்டு குறித்துரைத்தபடி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்பபிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் பொருத்திகள் பராமரிப்பு இருப்பின் பெறுமதி ரூபா 1,199,787 ஆக இருந்த போதும் அத்திகதியில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அந்த இருப்பின் பெறுமதி ரூபா 579,940 ஆக இருந்தமையால் ரூபா 619,847 ஆன வேறுபாடு காணப்பட்டது. | குறித்த இருப்புக் கணக்கு (Stock Control A/C 01-010-26011 Reconciliation) உடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகள் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையுடன் ஒப்பிட்டு சரியான பெறுமதி நதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

---

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 110 | சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் சேதங்கள் தொடர்பான பதிவேடு 110 நிதிப்பிரமாணம் படி தயாரிக்கப்பட்டு பேணிச்செல்வதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371 | செயல்நிமித்த கட்டுநிதி அது வழங்கப்பட்ட பணி நிறைவடைந்தவுடன் தீர்வுசெய்ய வேண்டிய போதிலும் 158 சர்ந்தப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 5,557,142 ஆன செயல்நிமித்த கட்டுநிதி தீர்ப்பனவு 01 மாதம் முதல் 08 மாதஙங்கள் வரையான காலதாமதமாகியிருந்தன. | பணி நிறைவடைந்தவுடன் முற்பணங்களை தீர்வு செய்வதற்கு ஆலோசணை வழங்கப் பட்டுள்ளதுடன் உரிய வேலைகளில் தீர்வு செய்யாதவர்களுக்கு நினைவூட்டல் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயல்நிமித்த கட்டுநிதி அது வழங்கப்பட்ட பணி நிறைவடைந்தவுடன் அக்கட்டுநிதியை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட தீர்வுசெய்ய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | செயல்நிமித்த கட்டுநிதி கொடுப்பனவின் போது அச்செயற்பாட்டிற்கு தேவையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செலுத்தப்பட்டிருந்த கட்டுநிதி தொகைகளில் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை 222 சந்தர்ப்பங்களில் ரூபா 2,401,166 தொகை செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன. | தேவையான தொகைக்கு இணங்கும் மதிப்பீடொன்று தயாரிக்குமாறு பதவியணியினருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்ததுடன் எதிர்காலத்தில் சரியான மதிப்பீட்டின் பிரகாரம் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும். | திட்டவட்டமான மற்றும் தேவையற்ற செயற்பாடுகளுக்காக உப கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 381 | உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை துரிதப்படுத்தும் செயற் திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்காக (AHEAD Project) நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளபபடாமல் அரச வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கொன்று 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | உயர்கல்வி அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த Accelerating Higher Education Expansion and Develop (AHEAD) செயற் திட்டத்திற்காக Operational and Monitoring Supporting Team (OMST) மூலம் 2018 ஏப்ரல் 16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ழுங்கபபட்ட ஆலோசணைகளின் பிரகாரம் வங்கிக் கணக்கொன்ற ஆரம்பிக்க நேர்ந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்டிருந்த 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 15,639,426 ஆன பொது வைப்புகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | வழங்குனர்களுக்கு நிறுத்தி வைத்தல் தொகையை உறுதிப்படுத்தம் கடிதங்கள் 2019 மே 19 ஆந் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொறுப்பேற்றல் தெரிவக்கப்பட்ட கடிதங்களுக்காக பணம் விடுவிக்கப்பட்டதுடன் பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்படாத வழங்குனர்களுக்குரிய 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பொது வைப்புக்களை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ரூபா 3,559,545 தொகை வருமானத்திற்கு எப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வைப்புக்கள் தொடர்பாக அரையாண்டு அறிக்கை தயாரிப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | |
| (vi) | நிதிப்பிரமாணம் 880 | பொருட்கள் மற்றும் பணத்திற்கு பொறுப்பாக செயற்படும் மற்றம் காசோலைகளுக்கு கையொப்பம் இடுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நிதிப்பிரமாணததின் பிரகாரம் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காசோலைகளில் கையொப்பம் இடுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணை வைப்பொன்றை பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.2, 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவு | மரணித்த சேவை விட்டுச் சென்ற, 04́ உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 230,080 ஆன இடர்கடன் மற்றும் விழா முற்பணக் கடன் மீதிகள் 05 ஆண்டு களுக்கு மேற்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 1 ஏற்றுக் கொள்கின்றேன் மரணித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 163,500 ஆன இடர் கடன் மீதியை அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.<br>2 சேவையிலிருந்து வெளியேறிய மற்றுமொரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 58,330 ஆன இடர் கடன் மீதி அவரின் பிணை மீறல் பெறுமதியை உள்ளடக்கி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தாபன விதிக் கோவையின் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 3 மற்றொரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,500 ஆன விழா முற்பணக் கடன் தொகையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன்.<br>4 கேட்டு விலகிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,750 விழா முற்பணத்தை சேமலாப நிதி கொடுப்பனவின் போது அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | |
| (இ) | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை<br>-------------------------------- | | | |
| | (i) X ஆம் அத்தியாயத்தின் 1.61 பிரிவு மற்றும் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் 2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் வெளியேல் என்பன பதிவு செய்வதற்காக வருகை பதிவேடொன்று பேணி அல்லது கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் வருகை வெளியேறல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் பதவியணியினருக்காக கையொப்ப பதிவேடொன்று அல்லது கைவிரலடையால இயந்திரர் பயன்படுத்தப்படுவதில்லை. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) VII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தி | 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக 390 உத்தியோகத்தர்களுக்காக வீட்டு வாடகை படிகளாக ரூபா 30,011,557 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அப்படிகள் கொடுப்பனவிற்காக பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதற்காக 2004 ஒக்தோபர் 28 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 2004/ED/HE/45 மூலம் ணவர்கள் மற்றும் பதவியணியினருக்கு முழு விடுதி வசதிகள் வழங்கப்பட வேண்டுமன அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாணவர்கள் மற்றும் கல்வி, கல்விசாரா அதிகரித்ததால் குத்தகை அடிப்படையில் வடுகளை வழங்க முடியாமல் இருந்தது. ஆதலால் தங்குமிட வசதிகளுக்காக படியொன்றை கொடுப்பனவு செய்வதற்கு வீட்டுக் குழு பரிந்துரைத்திருந்ததுடன் அது 155 ஆவது நிர்வாக சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 சனவரி 1 ஆந் திகதி முதல் இது வரை வீட்டுப் படிகள் செலுத்தப்பட்டு வருகின்றது. | வீட்டு வாடகை படிகள் கொடுப்பனவிற்காக பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| | (i) பதவிநிலை உத்தியோகத்த ஒருவருக்கு வழங்கக் கூடிய ஆகக்கூடிய கட்டுநிதி ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையை விஞ்சி திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் 04 உத்தியோகத்தர்களுக்கு 05 சந்தர்ப்பங்களில் ரூபா | பல்கலைக்கழகத்திற்கே உரித்தான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ரூபா 100,000 இனை விஞ்சி முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை களுக்கு இணங்க நடவடிகக்க எடுக்கப்பட வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 1,188,476 ஆன கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது. | | |
| | | (ii) | சில்லறை செலவினங்களுக்காக ரூபா 25,000 வரை சில்றை கட்டுநிதியொன்று வைத்துக்கொள்வதற்காக அனுமதி வழங்க கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியுமான போதும் அந்த எல்லையை மிகைத்து 2019 சனவரி 01 ஆந் திகதி சிறாப்பருக்கு ரூபா 50,000 சில்லறை காசு கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | ஏதெனும் உறுதிச்சீட்டு மூலம் பணக் கொடுப்பனவு மேற் கொள்ளும் போது அதற்காக காசோலை வழங்காமல் சிறாப்பர் மூலம் கொடுப்பனவு செய்வதற்காக சிறாப்பருக்கு இந்த ரூபா 50,000 ஆன சில்லறை காசு கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| | | (iii) | செயல் நிமித்த உப கட்டுநிதி பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கே வழங்க முடியுமான போதிலும் அதற்கு இணங்காத வகையில் பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 204 சந்தர்ப்பங்களில் ரூபா 4,394,459 ஆன கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | பதவிநிலைத்தரமல்லாத உத்தியோகத்தர்களான நிரந்தர சேவையில் உள்ள எழுதுனர்கள் மற்றும் அதற்குச் சமமான தரங பதவிகளுக்காக முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. விசேட செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பதவிநிலைத் தர உத்தியோகத்தர்கள் ஒரே தடவையில் முற்பணம் வழங்குவது தவிர்க்கப்படுகின்றது. | சுற்றறிக்கை களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | 1998 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 737 இலக்க பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | | கற்றல் விடுமுறைக்காக வெளிநாடு செல்கின்ற விரிவுரையாளர்களினால் ஒப்பந்தம் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அறவிடப்படுகின்ற அனைத்து நிதிகளும் வட்டி வருமானம் ஈட்டித்தரும் சொத்துக்களில் முதலீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும், மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியாகும் பொழுது ரூபா. 4,049,788 தொகை பல்கலைக்கழகத்தின் நடைமுறைக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் மீண்டெழும் ஒதுக்கீட்டுடன் தொடர்பான நிதியினை விடுவித்தல் முறையாக மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களில் அத்தியாவசிய அவசர மீண்டெழும் செலவுகளுக்காக அந் நிதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது டன் முறையாக அங்கீகரிக்கப்பட்ட மீண்டெழும் மதிப்பீட்டுடன் தொடர்பான நிதி விடுவிக்கப்பட்டதன் பின்னர் அந் நிதியை முதலீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | குறித்த சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீ.ஈ.டீ/12 இலக்க அரச வர்த்தக சுற்றறிக்கைய பிரிவு 8.2.2 | நிதி முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது விசேட 5 நிதியங்களில் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா. 23,542,190 நிதி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ் விசேட நிதியங்களின் முதலீடு சம்பந்தமாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | குறித்த சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (எ) | 1994 ஏப்ரல் 20ஆம் திகதிய 30/94 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை. | சிங்கராஜ வனத்திலுள்ள மரங்களின் வளர்ச்சி தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளுக்காக ஐக்கிய அமெரிக்க குடியரசின் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றினால் 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா. 19,289,996 வெளிநாட்டு உதவி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மூலம் பெறப்படாது நேரடியாகப் பெறப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 610 மற்றும் 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இதன் பின்னர் வெளிநாட்டு உதவிகள் சம்பந்தமான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் திரைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கு அறிவிக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவிக்கிறேன். | சகல வெளிநாட்டு உதவிகளும் நன்கொடைகளும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2009 செப்தம்பர் 01 ஆம் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று செலவு ரூபா. 3,090,061,214 ஆகவிருந்த நிலையான சொத்துக்கள் தொடர்பாக பேணப்பட்டு வந்த நிலையான சொத்து பதிவேடு சுற்றறிக்கையின் பிரமாணங்களுக்கு அமைவானதாக இருக்கவில்லை. அதே போன்று தற்பொழுது பாவனையிலுள்ள கணினி தகவல் சேகரிப்பில் 2013ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | தற்பொழுது பல்கலைக்கழகத்தில் பேணப்பட்டு வருகின்ற நிலையான சொத்து பதிவேடு 2020 மே மாதம் 22ஆம் திகதி அரச கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், கணனிமயப்படுத்தப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டினை எதிர்காலத்தில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கணனிமயப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பான அறிக்கை முறையாகவும் நாளதுவரையாக்கல் செய்தும் பேணப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 174,635,769 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 168,999,621 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,636,148 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|
| 2005ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மாணத்தின் பிரகாரம் பல்கலைக்கழக நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டிருந்த தொழில் அமைச்சுக்குச் சொந்தமான 30.9667 ஹெக்டயார் விசாலமான காணி, மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று 14 வருடங்கள் கடந்திருந்த போதும் பல்கலைக்கழகத்திற்குக் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 30.9667 ஹெக்டயார் விசாலமான காணி, பல்கலைக்கழகத்திற்குக் கையேற்பதில் தடையாகவிருந்த அங்கு தற்காலிகமாகக் குடியிருந்த தொழிலாளர்களை அகற்றுவதற்காக அ.ம.ப./19/0379/110/020 அமைச்சரவை பத்திரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நட்டஈட்டுக் குழுவின் மூலம் அக் காணியை கையேற்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணியின் உரிமையினை பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளை விடுக்கும் பொழுதும் கொள்வனவு செய்யும் பொழுதும் தேவைகள் மற்றும் களஞ்சியத்தில் காணப்படும் தொகை இருப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படாது பின்வரும் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| | 2015 மே 21 மற்றும் 2015 செப்டம்பர் 11 ஆகிய தினங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 354,200 பெறுமதியான A3 வகையைச் சேர்ந்த 385 நிழற்படப் பிரதித்தாள் பைக்கற்றுகள் 5 வருடங்களாக பயன்படுத்தப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | குணக்காய்வுத் தினமாகிய 2020 மே 19ஆம் திகதியன்று காணப்பட்ட 385 நிழற்படப் பிரதித் தாள் பைக்கற்றுகளில் 2020 ஜுன் 24 ஆம் திகதியாகும் பொழுது 50 பைக்கற்றுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் மீகுதியை பல்கலைக்கழகத்தின் தேவைக்கேற்ப பயன்படுத்த நடவடிக்கை எடுப்பேன். | தேவைகளின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | கழிவு நீர் சுத்திகரிப்பு தொகுதி மூலமாக சுத்திகரிக்கப்பட்ட நீர் வாகனம் கழுவுதல் மற்றும் ஏனைய பராமரிப்புத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படாமை காரணமாக பல்கலைக்கழகம் கடந்த 04 வருடத்திற்கான நீர் பாவனைக்காக ரூபா. 22,313,316 தொகையை செலவிட்டிருந்தது. | அகற்றப்படுகின்ற கழிவு நீரினை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்தல், மழை நீரைப் பயன்படுத்தல் மற்றும் பூமியிலுள்ள ஏனைய நீரூற்றுகள் போன்றவற்றைப் பயன்படுத்தல் ஆகியவற்றுக்கான ஆலோசனை சேவைக்காக மத்திய பொறியியலாளர் ஆலோசனை காரியாலயம் (CECB) நிறுவப்பட்டுள்ளது. அதேபோன்று அவர்கள் | நீர் பாவனைக்கான செலவைக் குறைப்பதற்காக கழிவு நீரினை சுத்திகரித்து பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தற்பொழுது விலைமனு கடிதக் கோவையினை தயாரித்துள்ளனர். விலைமனு செயற்பாட்டிற்கமைய மேற்குறிப்பிட்ட நீர் வசதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.3 நிதி குறை பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஜூலை 01 ஆம் திகதியன்று மீதி ரூபா. 1,080,448 ஆகவிருந்த 08 நிதியக் கணக்குகளின் நிதி பயன்பாடு தொடர்பாக பிரமாணங்கள் விதிக்கப்படாதிருந்ததுடன் இந் நிதி 02 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையிலான காலப்பகுதியினுள் நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இதில் 06 நிதியங்கள் தொடர்பான கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிதியங்களை ஆக்கபூர்வமான முறையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்து நிதியங்களுக்குமாக வெவ்வேறாக கோவைகளை பேணி வருவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | குறித்த நிதியங்கள் அவற்றின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தினால் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற 10 விசேட நிதியங்கள் தொடர்பான ரூபா. 1,211,071 தொகை முதலீடு செய்யப்படாது நடைமுறைக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டிருந்தது. | முறையான செயற்பாட்டு விதிமுறைகள் அமைக்கப்பட்டு உயரிய பலன் கிடைக்கும் வகையில் குறித்த நிதியங்களை முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | குறித்த நிதியங்கள் உயரிய பலன் கிடைக்கும் வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 பயன்பாடற்ற அல்லது குறை பயன்பாடுள்ள சொத்துக்கள், பிரியத மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஜுன் 29 ஆம் திகதி நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த தொழில்நுட்ப கற்கை பீட கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று அக் கட்டடத்தின் கீழ் மாடியில் (Basement) அமைக்கப் பட்டிருந்த பூர்த்தி செய்யப்படாத ஆய்வு கூடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,035,190 பெறுமதியான 06 ஆய்வுகூட உபகரணங்கள் ஒரு வருடத்திற்கும் கூடுதலான காலம் பயன்பாடின்றி களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் இவற்றில் ரூபா. 3,096,490 பெறுமதியான 04 உபகரணங்களின் உத்தரவாதக் காலமும் முடிவடைந்திருந்தது. | தொழில்நுட்ப பீட கட்டடத்தின் ஆரம்பகட்ட நிர்மாண கால எல்லையை நீடிப்பதற்காக பல்கலைக்கழக நிர்வாகக் குழுவினால் 2019.12.31 ஆம் திகதி வரை 195 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டன. தொழில்நுட்ப கற்கை பீடத்தின் கீழ் மாடி மற்றும் முதல் மாடிகளை (Ground floor and basement) 2020 ஜனவரி மாத இறுதியில் நிறைவு செய்து தருவதாக 2019.12.06 ஆம் திகதி நடைபெற்ற 7 ஆவது நிர்மாணம் தொடர்பான 07 ஆவது முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் குறித்த நிறுவனம் இணங்கியதன் காரணமாக இந்த ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | குறித்த கால எல்லைக்குள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிர்மாண வேலைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதுடன், உபகரணங்கள் ஆக்கபூர்வமாகப் பயன் படுத்தப்படுகின்ற வகையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் ரூபா 2,657,499 செலவில் மாணவர்களது கற்கை செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 டிரக்டர் வண்டிகள் உள்ளிட்ட விவசாய உபகரணங்கள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று 03 வருடங்கள் கடந்திருந்த | 2020 ஆம் ஆண்டு ஆரம்பமாகவுள்ள முதல் அரையாண்டிலிருந்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 4 சில்லு டிரக்டர் வண்டி பல்கலைக்கழகத்தின் சாதாரண நிர்வாக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | குறித்த சொத்துக்கள் உயரிய பலன் கிடைக்கும் வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

போதும் குறித்த நோக்கினை அடைந்து கொள்ளும் வகையில் பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | புரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று பல்கலைக்கழக நிரந்தர கல்விசார் பதவியணி மற்றும் கல்விசாரா பதவியணி ஆகியவற்றில் முறையே 43 மற்றும் 68 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதேபோன்று மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக கல்விசார் பதவியணி மற்றும் உண்மையான தற்காலிக கல்விசார் பதவியணி முறையே 96 மற்றும் 73 ஆக இருந்ததனால் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. | கல்விசார் பதவியணிவினருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக கால்நடை விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம் மற்றும் நடைமுறை விஞ்ஞான பீடம் ஆகியவற்றின் வெற்றிடங்கள் தொடர்பாக பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனுடன் தொடர்பான வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முகாமைத்துவ பீட வெற்றிடங்களை நிரப்புவதற்காக பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டு அதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.<br><br>அதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்காலத்தில் நடாத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தொழில்நுட்ப கற்கை பீட வெற்றிடங்களை நிரப்புவதற்காக பத்திரிகை விளம்பரம் வாயிலாக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு ஒரு விரிவுரையாளரை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், | குறித்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீண்டும் பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கிடைக்கப்பெற்றுள்ளன.<br><br>நேர்முகப் பரீட்சைகள் எதிர்காலத்தில் நடாத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>பீடங்களுக்கான தற்காலிக கண்காட்சியாளர் பதவிக்கான நியமனங்கள் வழங்கப்படுவது ஒவ்வொரு பீடத்தினதும் அவ்வப்போதைய தேவைகளின் நிமித்தமாக இருப்பதனால், இவ் வெற்றிடங்கள் குறித்த பீடங்களின் கல்வித்துறை பிரதான அதிகாரிகள் மற்றும் பீடாதிபதிகள் மூலம் விடுக்கப்படும் வேண்டுகோல்களின் அடிப்படையிலேயே நிரப்பப்படுகின்றன.<br><br>நிர்வாகப் பதவியணிவில் அதிகமான வெற்றிடங்கள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மூலமாகவே நிரப்பப்படுகின்றன. பல்கலைக்கழகம் மூலமாக இணைத்துக் கொள்ளப்படுவோருக்காக பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இணைத்துக் கொள்ளப்பட்டு 03 ஆண்டுகள் கடந்திருந்த போதும், கல்வித் தகைமைகளை உறுதி செய்துகொள்ளாத மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் க.பொ.த (உ/த) சித்தியடையவில்லை எனக் குறிப்பிடப்பட்ட ஒரு பயிற்றப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொடர்பில் | அவரது க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்கைப் பெறுபேறுகளை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்கப்பட்டது. அக் கடிதத்திற்கான பதிலாக 2020.06.16 ஆம் திகதிய 11/18/UN/2606 இலக்க கடிதம் மூலம் | பதவிகளுடன் தொடர்பான பரீட்சைப் பெறுபேறுகளை அந் நிறுவனங்களால் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இணைத்துக்கொள்ளப்பட்ட நாள் தொடக்கம் மீளாய்வாண்டின் டிசம்பர் மாதம் வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா. 2,343,438 தொகையும், 02 வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக ரூபா. 345,017 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | அவர் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி பௌதீக விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருப்பதாகவும் , இரசாயன விஞ்ஞான பாடத்தில் சித்தியடை யவில்லை எனவும் பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உப வேந்தரின் அங்கீகாரத்துடன் இச் சித்திகளுக்கிடையிலான முரன்பாடு தொடர்பான ஒரு விளக்கம் தேவையென 2020.09.09 திகதிய கடிதம் மூலம் குறித்த உத்தியோகத்தர் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள நிருவாக சபைக்கு இவ் விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய NP/SP/SDG/17 இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இற்கமைவாக சகல அரச நிறுவனங்களும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் அச் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்துடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை இனங்காணல் மற்றும் அவ்விலக்குகளை அளவீடு செய்வதற்கான அளவுகோல்களை இனங்காண்பதுடன் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இணைந்த திட்டத்தின் பிரதான 07 நோக்கங்களில் உப கொள்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அது வேறாக குறிப்பிடப்படவில்லை. அதேபோன்று நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் வேறாக குறிப்பிடப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இற்கமைவாக தரமான கல்வியை வழங்குவதற்கு தேவையான இலக்குகளை இனங்கண்டு அதனுடன் தொடர்பான செயலாற்றுகை சுட்டிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |